# தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்,சென்னை – 6

ந.க.எண். 52660 /ஐ–இ2/2021, நாள். 01.02.2022

| பொருள் | ஆசிரியர் நல தேசிய நிதியம், தமிழ்நாடு – தொழில் நுட்ப பயிலக பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு பயிலும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு 2021–2022 கல்விஆண்டிற்கு படிப்புதவித் தொகை வழங்குதல் – விண்ணப்பங்கள் கோருதல் – சார்பு. |
|---|---|
| பார்வை | 1அரசாணைஎண்.161,பள்ளிக் கல்வித்துறை நாள்.20.05.1998 |

-----

தமிழ்நாடு தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து தொழிற்கல்வி பயிலும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு 2021–2022ஆம் கல்வி ஆண்டிற்கு படிப்புதவித் தொகை வழங்க விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்தகவலை அனைத்து ஆய்வு அலுவலர்களுக்கும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட **அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும்** உடனடியாக சுற்றறிக்கை மூலம் அறிவித்து படிப்புதவித் தொகை பெற விரும்பும் ஆசிரியர்கள் 28. 02. 22க்குள் இணைப்பில் உள்ள விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்து

**ஆணையர், பள்ளிக் கல்வி ,**
**டி.பி.ஐ. வளாகம், கல்லூரி சாலை சென்னை – 6**

என்ற முகவரிக்கு நேரிடையாக அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பங்களும், விண்ணப்பத்திற்குரிய தகுதிகள் பற்றிய விவரங்கள் ஆய்வு அலுவலர்களின் மின்னஞ்சல் முகவரியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, அதன் விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட **அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி** ஆசிரிய, ஆசிரியைகளுக்கு தெரிவிக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இப்படிப்புதவித் தொகை பெறும் விவரம் தெரியவில்லை என்று தெரிவிக்காத வண்ணம், எந்த விதமான புகாரும் எழாத வகையில் விழிப்புடன் செயல்படுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் மீண்டும் அறிவுறுத்தப்படுகின்றனர். இத் தொழிற்கல்வி படிப்புதவித் தொகை குறித்து அலுவலக தகவல் பலகையில் விரிவான விளம்பரம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பங்களை அனுப்பும் போது கீழ்கண்ட குறிப்புகளை கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும் என ஆசிரியர்களுக்கு தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

1. விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் மகன்/மகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட நான்காண்டு தொழிற் கல்வி பட்டப்படிப்பு (4 Years Degree Courses) மற்றும் மூன்று ஆண்டு பட்டயப்படிப் (Diploma Courses) படிப்பவர்களாக இருத்தல் வேண்டும். மேலும்

கல்வி உதவித் தொகை கோரவிருக்கும் ஆசிரியர்கள் குறைந்தபட்சம் பத்தாண்டுகள் பணியினை முழுமையாக முடித்திருக்க வேண்டும்.

2. இதற்கு முந்தைய அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். (சான்றளிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் நகல் இணைத்தல் வேண்டும்)
3. மனுவில் உள்ள அனைத்து கலங்களும் முழுமையான அளவில் சரியாக தமிழில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். சரியாக பூர்த்தி செய்யப்படாத மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (பணிபுரியும் பள்ளி, முகவரி பின் கோடுடன் இருத்தல் வேண்டும்)
4. பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.7,20,000/– (அடிப்படை ஊதியம் மட்டும் )க்குள் இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் பள்ளிக் கல்வி ஆணையர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள். 28.02.2022க்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஆசிரியர்கள் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ ஆணையர், பள்ளிக் கல்வி, கல்லூரி சாலை, சென்னை – 6 என்ற முகவரிக்குஅனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
6. தொழிற்கல்வி படிப்பில் கடைசியாக எழுதிய தேர்வில் தேர்ச்சி பெற்றமைக்கு ஆதாரமான மதிப்பெண் சான்றிதழ் நகல்கள் இன்றி பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. தந்தை அல்லது தாய் பணியின் விவரம் மற்றும் அவர்களின் ஊதிய சான்று விவரங்களை கண்டிப்பாக விண்ணப்பத்தில் உள்ள கலத்தில் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
8. தந்தை அல்லது தாய் ஆசிரியராக பணிபுரிந்தால் மட்டுமே விண்ணப்பிக் வேண்டும்
9. ஆசிரியரல்லாத பணியாளர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.
10. ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் பிள்ளைகள் மற்றும் இறந்து போன ஆசிரியர்களின் பிள்ளைகள் ஆகியோர்களும் இப்பப்புதவித் தொகை பெற தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பிக்க கடைசி தேதியான 28.02.2022க்குப்பின் கண்டிப்பாக ஏற்கப்படமாட்டாது.

**இணைப்பு. விண்ணப்ப படிவம்**

**பள்ளிக் கல்வி ஆணையருக்காக**

9/2/22

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

# தேசிய ஆசிரியர் நல நிதி நிறுவனம், தமிழ்நாடு

# தொழிற்கல்வி படிப்புதவித்தொகை விண்ணப்ப படிவம்

## 20..................................20

(தொழிற் கல்வி படிப்புகளான பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் பல்துறை தொழிற் நுட்பக் கல்லூரி பட்டயப் படிப்புகளுக்கு மட்டும்)

1. விண்ணப்பதாரரின் பெயர் (மாணவன் / மாணவி / தெளிவாக) :

2. (அ) விண்ணப்பதாரரின் தந்தையின் பெயர் பணியாற்றும் / பணிபுரிந்த பள்ளி பெயர்

   ஆசிரியரல்லாதவராக இருப்பின் அன்னாரின் பணி விபரத்தை குறிப்பிடுக. (ஊதியச் சான்று இணைக்கப்பட வேண்டும்) :

   (ஆ) விண்ணப்பதாரரின் தாயின் பெயர் தாய் பணியாற்றும்/பணிபுரிந்த பள்ளி பெயர் ஆசிரியரல்லாதவராக இருப்பின் அன்னாரின் பணி விபரம் (ஊதியச் சான்று இணைக்கப்பட வேண்டும்) :

ரூ.

3. (அ) தந்தையின் மாதாந்திர ஊதியம் / ஓய்வூதியம் :

   அடிப்படை ஊதியம் :

   சிறப்பு ஊதியம் :

   தனி ஊதியம் :

   ஓய்வூதியம் :

   மொத்தம் :

   (ஆ) தாயின் மாதாந்திர ஊதியம் / ஓய்வூதியம் :

   அடிப்படை ஊதியம் :

   சிறப்பு ஊதியம் :

   தனி ஊதியம் :

   ஓய்வூதியம் :

   மொத்தம் :

4. தந்தை, தாய் ஆகிய இருவரின் மொத்த ஆண்டு வருமானம் (நிலச்சொத்து மூலமும் மற்றும் இதர வழிகளிலிருந்து வரும் வருமானங்கள் உள்பட) :இதர வருமானங்கள் ஊதியம் நீங்கலாக

குறிப்பு : 1. நிலச் சொத்து இதர சொத்துக்கள் இருப்பின் அதன் மூலம் வரும் வருமானம் அல்லது இதர சொத்துக்கள் ஏதும் இல்லை என்றால் அதற்கு ஆதாரமான வருவாய் துறையைச் சார்ந்த வட்டாட்சியரிடத்தில் உரிய சான்றிதழைப் பெற்று தவறாமல் இணைக்க வேண்டும்.

2. இதர வருமானம் என்ற தலைப்பில் கணக்கெடுக்கும்போது தந்தையோ அல்லது தாயோ ஆசிரியரல்லாத இதரப் பணியில் இருப்பின் அந்த வருமானத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

5. தந்தை / தாய் / முழு வீட்டு முகவரி அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் :

6. விண்ணப்பதாரரின் பிறந்த
தேதியும், வயதும் :

7. விண்ணப்பதாரரின் படிப்புப் பற்றிய விபரமும், கல்வி பயிலும் கல்வி நிறுவனத்தின் விபரமும்

| பல்கலைக் கழகத்தின் பெயர் | கல்வி நிறுவனத்தின் பெயர் | தற்சமயம் பயிலும் வகுப்பும் பாடமும் | சென்ற ஆண்டு நடந்த பொது தேர்வில் எல்லா பாடங்களிலும் நிலுவையின்றி தேர்ச்சிப்பெற்றுள்ளாரா? |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

8. விண்ணப்பதாரர் இந்த படிப்புதவித்தொகையைத்
தவிர வேறு படிப்புதவித்தொகை அல்லது இதர
கல்விச் சலுகை பெறுகிறாரா?

9. 20....................-20........................ ஆண்டிற்கான கல்விச் செலவினங்கள்
பற்றிய விபரங்கள்.

(அ) கல்விப் போதனைக் கட்டணம்..................................................................

(ஆ) இதரக் கட்டணங்கள்....................................................................................

## உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறோம்.

1. மாணவனின்
கையொப்பம்

2. தந்தையின்
கையொப்பம்

3. தாயின்
கையொப்பம்

இருப்பிடம் :

தேதி :

குறிப்பு : உறுதிமொழியில் அனைவரின் கையொப்பமும் தவறாமல் பெறப்படவேண்டும்.

விண்ணப்பதாரரின் தந்தை / தாய் பணியாற்றும் / பணி புரிந்த பள்ளி தலைமை ஆசிரியரின் குறிப்புரை

1. செல்வன்/செல்வி..........................................................................................மாணவனின்/மாணவியின் தந்தையாகிய/தாயாகிய திரு/திருமதி.......................................................................................என்ற.....................................ஆசிரியர் அரசு கல்வித் துறையில் அங்கீகரிக்கப்பட்ட.................................................................................................................................................என்ற பள்ளியில் பணிபுரிகிறார்/பள்ளியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் / பள்ளியில் பணி புரியுங்கால் மறைந்தவர் என்பதற்கு சான்றளிக்கிறேன்.

2. ஊதிய சான்று

1. அடிப்படை ஊதியம்
2. தனி ஊதியம்
3. சிறப்பூதியம்

மேலும் விண்ணப்ப படிவத்தில் கலம் 3ல் குறிப்பிட்டுள்ள ஊதியம் சார்பான விபரங்கள் சரிபார்க்கப்பட்டு சரியாகவுள்ளன என்பதற்கும் சான்றளிக்கிறேன்.

நாள்.................................

தலைமை ஆசிரியர் / உயர் அலுவலரின்
கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்)

## இணைப்பு - 1

1. கல்லூரி / தொழில் நுட்பப் பயிலகம் பெயர் மற்றும் படிக்கும் வகுப்பு மற்றும் ஆண்டு (Civil/Mechanical / Electrical) பிரிவு விவரம் குறிப்பிடவேண்டும். :

2. கல்லூரி / தொழில் நுட்பப் பயிலகம் இணைக்கப்பட்டு உள்ள பல்கலைக்கழகத்தின் பெயர் அல்லது அரசுத்துறையின் பெயர் :

3. இந்த கல்வி நிறுவனம், தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் குறிப்பிடவேண்டும் :

4. தற்போது பயிலும் ஆண்டு, வகுப்பு :

5. நிலச்சொத்து (அ) இதரவருமானங்களுக்கு வட்டாட்சியர் வருமான சான்று இணைக்கப்படவேண்டும். இல்லையென்றால் இல்லையென்ற சான்றினை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்கவேண்டும். :

6. ஓய்வூதியம் பெறுபவராயின் அந்த ஓய்வூதியம் தொகைக்கு அரசு கருவூலத்திலிருந்து சான்று இணைக்கப்படவேண்டும் :

7. விண்ணப்பதாரர் ஆசிரியர் தேசிய நல நிதி நிறுவனத்தின்மூலம் முந்தைய ஆண்டு படிப்புதவித் தொகை பெற்று இருப்பின் பள்ளிக் கல்வி இயக்குநர் செயல்முறைகளின் எண்ணும், நாளும் குறிப்பிடவேண்டும் :

8. நடந்து முடிந்த ஆண்டு / ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வுகள் மற்றும் தேர்ச்சிகளின் விவரங்களைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். பாடங்கள் நிலுவை, இருப்பின் அதன் விவரத்தையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். மதிப்பெண் சான்றின் நகல் இணைக்கப்படவேண்டும். :

9. விண்ணப்பதாரர் பயிலும் பட்ட / பட்டய வகுப்பின் மொத்த கால அளவு :

10. விண்ணப்பதாரர் பயிலும் பட்ட / பட்டய வகுப்பு முடிவடையும் ஆண்டு / மாதம் (சரியாக) :

11. விண்ணப்பதாரர் பயிற்சிக்கால உதவித் தொகை (Stipend) பெறுபவராயின் அதன் விவரம் :

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன்

***கல்லூரி முதல்வரின் கையொப்பம்***
***அலுவலக முத்திரையுடன்***

***மாணவரின் தந்தை / தாய் கையொப்பம்.***

**படிப்புதவித் தொகை விண்ணப்பத்தினை பரிந்துரை செய்யும் கல்லூரி / தொழில் நுட்ப கல்லூரி முதல்வரின் குறிப்புரை.**

**திரு..........................................................................................................என்ற ஆசிரியரின் மகனாகிய / மகளாகிய செல்வன் / செல்வி..........................................................................................................................................**
**கல்லூரியில் / தொழில் நுட்பக் கல்லூரியில்..............................ஆண்டு 20........................ 20........................ல் பயிலுகிறார் (தொழிற் பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பின் விபரம் அளிக்கப்பட வேண்டும்) இம் மாணவன் / இம் மாணவி இந்தப் படிப்புதவி தொகையைப் பெற தகுதியுடையவராகிறார்.**

**இவ்விண்ணப்ப படிவம் பக்கம் 2ல் உள்ள 6,7,8 & 9 கலங்களுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் ஆராயப்பட்டு சரியாக உள்ளன என்பதற்கும் சான்றளிக்கிறேன்.**

**இம்மாணவன் எந்த வகுப்பிலும் நிறுத்தி வைக்கப்படவில்லை (Not Detained) என்பதற்கும், வேறு எந்தவிதமான படிப்புதவித் தொகையோ / இதர கல்விச் சலுகையோ பெறவில்லை என்பதற்கும் சான்றளிக்கிறேன்.**

**மேலும் இம்மாணவன் / மாணவி முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் நிலுவையின்றி (Arrears) தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதற்கும் சான்றளிக்கிறேன்.**

**கல்லூரி / தொழில் நுட்பக் கல்லூரி**
**முதல்வரின் கையொப்பம் (ம)**

**கல்லூரி / தொழில் நுட்பக்**
**கல்லூரியின் பெயர் மற்றும்** **பெயர் :**

**முத்திரையுடன் (With Seal)** **பதவி :**

**இருப்பிடம் :**

**தேதி :**

குறிப்பு :

விண்ணப்பத்தில் கலங்கள் 6 முதல் 9 முடிய உள்ள விபரங்களுக்கு கல்லூரி முதல்வரால் சான்றளிக்கப்பட வில்லையென்றால் இவ்விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.